கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 02.07.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2024 –2025**
**பொதுப்பிரிவு (Academic Stream)**

இந்த கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் (TNAU), தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கும் (TNJFU) மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் (வேளாண்மைப் பிரிவு, (AU)) ஒரே விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீற்கும் (Academic Stream) மற்றும் 7.5% இடஒதுக்கீற்கும் இணையதளவழி கலந்தாய்வு 23.06.2024 முதல் 26.06.2024 வரை நடைபெற்றது. இணையதளவழி கலந்தாய்வில் மொத்தம் 14,000 (பதினான்காயிரம்) மாணவ/மாணவிகள் பங்கேற்றுள்ளனார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மொத்தம் 4645 இடங்கள் இணையதளவழி கலந்தாய்வில் கலந்து கொண்ட மாணவ / மாணவியர்கள் மூலம் நிரப்பப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு தற்காலிக சேர்க்கை அவர்கள் பெற்ற தரவரிசை மதிப்பெண், விருப்பப்பாடம் மற்றும் சாதிய அடிப்படையில் வழங்கப்பட்டன.

அவ்வாறு, தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட மாணவ/ மாணவியர், தங்களின் அசல் சான்றிதழ்களான (10–ம் மற்றும் 12 –ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ் (Community Certificate) மற்றும் மாற்றுச் சான்றிதழ்க ளுடன் (Transfer Certificate) கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள அண்ணா அரங்கத்தில் 03.07.2024 முதல் 06.07.2024 வரை நடைபெறவுள்ள

சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டு தங்களின் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுபடுகிறார்கள்.

இத்தகவல்கள் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு அவர்கள் பதிவு செய்த மின்னஞ்சல் (email) முகவரிக்கும் மற்றும் அலைபேசி எண்ணிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாணவ/ மாணவியர்களின் பட்டியல் https://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் (email) மூலமாகவும் 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***